# பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் கையாளும் பணியாளர்களுக்கான நியம படிமுறைகள்



SHANTHIHAM
Association for Health & Counsellin

Association for Health and Counselling
"Shanthiham"
No.8.8/1 Katpahavinayagar Lane
Off Kachcheri Nallur Road,
Jaffna.

# பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் கையாளும் பணியாளர்களுக்கான நியம படிமுறைகள்

## அறிமுகம்

தற்சமயம் குறிப்பாக போரின் பிற்பாடு மலிந்து போன பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளால் பாதிக்கப் பட்டவர்களுடன் தொடர்புகொண்டு அவர்கள் எங்கு உதவி தேடிச் செல்கிறார்கள் என்று அவதானித்ததுடன், அவர்களுக்கு உதவு வோரிடம் இருந்தும் (காவல்துறை பெண்கள் சிறுவர் பிரிவு, சட்ட ஆணைக்குழு, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை) பெற்ற தரவுகளின் அடிப்படையிலும் 2014-2016 காலப்பகுதியில் சாந்திக நிறுவன உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட தரவுகளின் தகவல் தொகுப்பின் மூலமும், ஐ.நா மற்றும் சர்வதேச மூல ஆவணங்களைக் கொண்டும் காலத்தின் தேவை கருதியும் இந்த ஆவணமானது உருவாக்கப்பட்டது. பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் கையாளுவதற்குப் பயன் படுத்தப்படும் பின்வரும் மூலவளங்களினைத் தழுவியது:

- பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் கையாளுகைக்கான IASC இன் நியமப் படிமுறைகள் - பால்நிலை மற்றும் மனிதநேய செயற்பாடுகளுக்கான உப செயற்குழு (வைகாசி 2008)).

- அவசர காலப்பகுதிகளில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைத் தவிர்ப்பதற்காக மற்றும் கையாளுவதற்கான அடிப்படை நியமங்கள், UNFPA (2015).
- தொண்டு நிறுவனங்களின் செயற்பாட்டு நியமங்களுக்கான செயலணிக் குழு 2015. மனிதநேய செயற்பாடுகளின்போது பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் மீதான தலையீடுகளை ஒருங்கிணைப்பதற்கான வழிகாட்டி: ஆபத்தினைக் குறைத்தல், நல்லிணக்கத்தினை ஊக்கப்படுத்துதல் மற்றும் மீள்வதற்கு உதவுதல்.

பின், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள களப்பணியாளர்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் ஆலோசனைகளினூடாக இவ்வாவணம் விருத்தி செய்யப்பட்டது. தொடர்ந்தும் விருத்தி செய்யப்பட்டு வருவதால், இதனை உபயோகிக்கும் களப்பணியாளர்களையும் மற்றும் உத்தியோகத்தர்களையும் ஆக்கபூர்வ ஆலோசனைகள் மற்றும் திருத்தங்களைத் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (பா.அ.வ) பெரும்பாலும் கலாசார மரபுகளுக்குட்படுத்தப்பட்டு குடும்ப வாழ்க்கையின் ஓர் அன்றாட சாதாரண அங்கமாகத் தட்டிக் கழிக்கப்படுகின்றன. ஆயினும், பா.அ.வ தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அதன் பாரிய விளைவுகள் உணரப்படும் தன்மை அதிகரிப்பினால், அது ஓர் வன்முறை என்பதுடன் மனித உரிமை மீறலாகவும், பாதிக்கப்பட்ட நபர் வன்முறையால் பாதிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை எனவும் அவர்களால் எதிர்க்கவும், முறையிடவும், பாதுகாப்பைத் தேடவும் முடியும் என்பது தொடர்பான பார்வை மாற்றமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறைந்த விழிப்புணர்வு, வினைத்திறனான சட்ட உருவாக்கம், உதவும் பொறிமுறைகள், ஆதரவு தேட முயலுவோருக்கான பாதுகாப்பு வலையமைப்பு மற்றும் வன் முறைகளாக ஏற்றுக்கொள்வதைப் பின்தள்ளும் சமூக நியமங்கள் (உ-ம் தப்பிப்பிழைத்தவர்களுக்கு ஆதரவளிப்பதற்குப் பதிலாக குற்றம் சாட்டுதல்), போதுமான அளவு அரசாங்கப் பொறிமுறைகள் இல்லாமை, சிவில் சமூகம் மற்றும் சமூகமட்டத்தில் பா.அ.வ இற்கு எதிராக ஒன்றிணைந்து முழுமையாக செயற்படுதல் என்பவற்றிலுள்ள இடைவெளிகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இத்தகைய நிலையானது போருக்குப் பின்னரான சூழ்நிலையில் மேலும் தீவிரமடைந்துள்ளது. சமூகக்கட்டமைப்புகள் மற்றும் பாதுகாப்புப் பொறிமுறைகள் உடைவடைந்தமை, சமூக நடத்தையை வழிப்படுத்தும் நியமங்கள் பலவீனமடைந்தமை, குடும்ப உறவுகளின் பிரிவு, ஆண்களின் குடி, போதைவஸ்து துர்பாவனை அதிகரிப்பு, பெண்கள் மற்றும் சிறுவர்களின் கருத்துகளையும் கோரிக்கைகளையும் வளர்ந்தவர்கள் செவிமடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக இருப்பதுடன் பெண்கள், சிறுவர்களின் பாதுகாப்பை அதிகாரிகள் கருத்தில் எடுக்கத் தவறியமை உள்ளடங்கலாக பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம்.

பா.அ.வ ஆல் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மிகக் குறைந்தளவிலுள்ள வினைத்திறனான பொறிமுறையின் மூலம் உடனடித் தேவைகள் அல்லது நீண்டகாலத் (தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய) தேவைகள் வழங்கப்படுகின்றன. இருப்பினும் தலையீடு செய்வதற்குப் பொருத்தமான உத்தியோ கத்தர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றது. இந்நிலையில் பா.அ.வ தொடர்பான சம்பவங்களில் தலையிடும் உத்தியோகத்தர்கள் சிறப்பாகக் கையாளுதல் என்பதில் (பாரிய) சவால்களை எதிர்

நோக்குகின்றார்கள். அத்துடன் தப்பிப்பிழைத்தோர் எதிர்கொள்ளும் ஆரோக்கியம் மற்றும் உளவியல்சார் பிரச்சினைகளின் கடுமையான, நீண்டகாலத் தாக்கம் தொடர்பான விழிப்புணர்வற்ற நிலை காணப்படுகின்றது.

பா.அ.வ ஆல் தப்பிப்பிழைத்தவருக்கு இலகுவாகப் பெறக் கூடிய குறைந்தபட்ச சேவை கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும். இவை உரிய நிறுவனங்கள் அல்லது உத்தியோகத்தர்களுக்கு வழிப்படுத்தல் தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் பா.அ.வ க்கு உட்படுத்தப்பட்ட பெண்கள், சிறுவர்களுக்கு ஆதரவு அளிக்கக்கூடிய இயலளவுடன் இருத்தல் வேண்டும்.

பா.அ.வ க்கு உட்பட்டவர்களின் பிரத்தியேக நிலைமையை விளங்கிக்கொண்டு காத்திரமான கூர் உணர்வுடன் கையாளப்பட வேண்டும். அத்துடன் முறைப்பாடுகளை நேரடியாகக் கையாளும் பலருக்கும் பயிற்சியளித்தல் அவசியமானதாகும். நலிவுற்றவர்களில் குறிப்பாகப் பெண்கள், சிறுவர்கள் அதிகம் பா.அ.வ பாதிப்பினால் நலிவு நிலையில் உள்ளார்கள்.

## தற்போதைய நிலை தொடர்பான பார்வை

### வடமாகாணத்தில் உள்ள பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான குறிகாட்டிகள்

**யாழ்ப்பாணத்தின் பால்நிலை சார்ந்த உளசமூகப் பிரச்சினைகள்**




மூலம்: பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் (தாய், சேய் நலப் பிரிவு)




மூலம்: புள்ளிவிபரத் திரட்டு, வடமாகாண சபை

**சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகம்,**
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள்
(2009 - 2015)




மூலம்: புள்ளிவிபரத் திரட்டு, வடமாகாண சபை




மூலம்: புள்ளிவிபரத் திரட்டு, வட மாகாண சபை

சட்ட அமுலாக்கம் தொடர்ந்தும் பலவீன நிலையில் உள்ளது. வன்முறையாளர்கள் சட்டத்தைப் பொருட்படுத்தாது, தமது கொடூர நடத்தைகளைத் தொடரும் அதேநேரம், வன்முறையால் தப்பிப்பிழைத்தவர்கள் அக்கறை கொள்ளாத அதிகாரிகளையும், சமூக எதிர்ப்பையும் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

மேலும், ஆதரவு தேடும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான பொருத்தமான பாதுகாப்பு இல்லங்கள் போதியளவில் இல்லாத நிலை காணப்படுகின்றது.

குற்றவியல் நீதித்துறை, பா.அ.வ ஐக் கையாளும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பெண்கள், சிறுமியரின் உரிமைகளுடன் வேலை செய்யும் நீதித்துறைசார் உத்தியோகத்தர்கள் கரிசனையுடன் செயற்படும் தன்மையும், நடைமுறையும், மனப்பான்மையும் மேம் படுத்தப்படவேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

**பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை கையாளுவதற்கான நியம செயற்பாட்டு படிமுறைகள், நோக்கம் மற்றும் வரையறை**

இந்நியம படிமுறையானது பா.அ.வ தொடர்பான முறைப்பாடுகளை முழுமையாகவும், வினைத்திறனாகக் கையாளவும், உடனடி மற்றும் நீண்டகாலத் தலையீடுகளுக்கு வழிவகுக்கும் அதேவேளை, படிமுறை மருத்துவப் பராமரிப்பு, உளவியல் மற்றும் உளசமூக ஆதரவு என்பவற்றுடன் பாதுகாப்பு இல்லம் போன்ற உடனடித் தேவைகளையும் திறன் விருத்தி மற்றும் வாழ்வாதாரம் போன்ற நீண்டகாலத் தேவைகளின் அவசியத்தையும் உணர்த்து கின்றது.

பா.அ.வ என்பது ஒரு நபரின் பால் அல்லது பால்நிலையைக் கொண்டு நடைபெறும் வன்முறைகளைக் குறிப்பிடுகிறது. இவை உடல், உள, பாலியல் காயப்படுத்தல், துன்புறுத்தல், அச்சுறுத்தல், சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற நோக்கங்களைக் கொண் டுள்ளன. இதனால் பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், சிறுமியர்கள், முதியவர்கள் எனப் பலதரப்பினர் பாதிக்கப்படலாம். எனினும் பெண்கள் மற்றும் சிறுமியர்கள் பிரதானமாக அதிகளவில் பாதிக் கப்படுகிறார்கள்.

**பால்நிலை அடிப்படையிலான வன்முறையை விளங்கிக் கொள்வதற்காக பின்வரும் சிலவற்றைக் குறிப்பிடலாம்:**

**அ.** குடும்பத்தில் நடைபெறும் உடல், உள மற்றும் பாலியல் வன்முறைகள், அடித்தல், பாலியல் தொடர்பான சுரண்டல், குடும்பத்தில் உள்ள சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தல், சீதனத்துடன் தொடர்பான வன்முறைகள், திருமண பந்தத்தில் பாலியல் பலாத்காரம் என்பவனவற்றை உள்ளடக்கிய

பெண்களைப் பாதிக்கும் பாதகமான பாரம்பரிய முறைகள், வாழ்க்கைத்துணையல்லாதவரால் ஏற்படுத்தப்படும் வன்முறைகள் மற்றும் சுரண்டல் தொடர்பான வன்முறைகள்.

**ஆ.** சமூகத்தில் நடைபெறும் பாலியல் வன்புணர்வு, பாலியல் துஷ்பிர யோகம், பாலியல் தொந்தரவு; வேலைத்தளத்தில், கல்வி நிறுவனங்களில், ஏனைய இடங்களில் நடைபெறும் அச்சுறுத்தல்கள்; பெண் வஞ்சக் கடத்தல், பாலியல் தொழிலுக்கு நிர்ப்பந்தித்தல் என்பவற்றை உள்ளடக்கிய உடலியல், பாலியல் மற்றும் உளவியல் வன்முறைகள்.

**இ.** உடல், உள மற்றும் பாலியல் வன்முறைகள் அரசு மற்றும் அரச நிறுவனங்களால் ஏற்படுத்தப்படுதல். இவை சில வேளைகளில் குற்றமாகக் கருதாநிலையில் இருத்தல்.[1]

பா.அ.வ. க்கு மிகப் பிரதானமான அடிப்படைக் காரணமாக காலங்காலமாக உள்ள ஆண், பெண்களுக்கிடையிலான சமமற்ற அதிகார உறவுநிலை; ஆணாதிக்கக் கலாசாரமானது ஆண்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதனூடாக பெண்கள் - ஆண் களுக்கிடையே ஒரு பாரபட்சமான நிலையை ஏற்படுத்துகின்றது. இவற்றுடன் வறுமை, அலட்சியப்படுத்தல்; சமூக விரோத நியமங்கள், மது, போதைவஸ்துக்கு அடிமையாதல் போன்ற காரணிகள் பா.அ.வ ஐ மேலும் தீவிரமாக்குகின்றன.

1

இந்த ஆவணத்திற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தில் இருந்து பா.வ.அ.தொடர்பான விரிபுபடுத்தப்பட்ட வரைவிலக்கணம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை பெண்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்துதல் தொடர்பான பிரகடனத்தின் (1993) உறுப்புரிமை 1,2 மற்றும் பெண்களுக்கு எதிரான அனைத்து பேதங் காட்டலையும் ஒழித்தல் சார் உடன்படிக்கை (CEDAW) இற்கான குழுவின் 11ம் அமர்வின் சிபாரிசு 19ன் 6வது பந்தியை ஆதாரமாகக் கொண்டதாகும்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் எனப்படுவது ஒருவர் மீது பால்நிலை அடிப்படையிலோ அல்லது பால் அடிப்படையிலோ ஏற்படுத்தப்படும் வன்முறையாகும். இது உடல், உள, பால் ரீதியான பாதிப்புகளை அல்லது துன்பங்களைக் கொடுப்பதையும், வற்புறுத்தல். அச்சுறுத்தல் மற்றும் சுதந்திரமான செயற்படுத்தலைத் தடுத்தல் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும் பெண்கள், ஆண்கள், ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் என்போர் பாதிக்கப்படலாம் அல்லது பால் நிலை அடிப்படையிலான வன்முறைக்கு ஆளாகித் தப்பியிருப்போர், பெண்களும், பெண்பிள்ளைகளுமே முக்கியமாக பாதிக்கப்பட்டோர் அல்லது தப்பியிருப்போர் ஆவார்

பெண்கள் சிறுவர்களுக்கெதிரான வன்முறை தொடர்பாக விழிப்புணர்வற்ற நிலை காணப்படுகின்றது. அவர்கள் வன் முறைக்குட்படவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் பாதுகாப்புக் கோரலாம்; முறையிடலாம்; பாதுகாப்பைத் தேடலாம். பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் ஏற்படும் உடல், உள, சமூக மற்றும் குடும்ப, பொருளாதார, கலாசார, ஆன்மீக விளைவுகள் தொடர்பாக விழிப்புணர்வற்ற நிலை காணப்படுகின்றது.

## பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான வரைவிலக்கணம்

### 1. பாலியல் வல்லுறவு:

ஒரு பெண்ணின் சம்மதமின்றி நடைபெறும் உடலுறவு பாலியல் வல்லுறவாகக் கருதப்படும். பெண்ணின் சம்மதமின்றி யோனி, குதம், வாய் மூலமாக உடலின் பாகத்தினை அல்லது பொருளினை உட்புகுத்தல் பாலியல் வல்லுறவாகும். உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்: கூட்டு வன்புணர்வு, திருமணபந்த நிலையின்போதான பாலியல் வல்லுறவு, நிர்ப்பந்தித்தல், தன்னினச் சேர்க்கை, வாய்வழி வன்பாலுறவு.

### 2. பாலியல் துன்புறுத்தல்:

பாலியல் பலாத்காரத்திற்கான முயற்சி, பாலியல் நோக்கான தொடர்பு அல்லது தொடுகை பாலியல் துன்புறுத்தல் ஆகும். நிர்ப்பந்தித்து முத்தமிடல்; தவறான தடவுதல்; மார்பு, இனப்பெருக்க உறுப்பு என்பனவற்றில் பொருத்தமற்ற தொடுகை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

### 3. உடலியல் ரீதியான துன்புறுத்தல்:

பாலியல் நோக்கமல்லாத உடலியல் ரீதியான வன்முறைகள் உடலியல் ரீதியான துன்புறத்தலாகும். உதாரணமாக அடித்தல், உதைத்தல், நெரித்தல், வெட்டுதல், தள்ளுதல் உடலியல் நோக்கான எரித்தல், சுடுதல், ஏதாவது ஆயுதங்களைப் பயன்படுத்தல், அசிட் தாக்குதல், ஏனைய செயற்பாடுகளினால் உடலியல் ரீதியான கண்டல், காயம், வலி என்பனவற்றை உள்ளடக்கிக் கொள்ளலாம்.

### 4. உளவியல், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம்:

உளரீதியான அல்லது உணர்வுரீதியான துன்புறுத்தல். உதாரணமாக உடல் அல்லது பாலியல் ரீதியாக அடிப்பேன் எனப்

பயமுறுத்தல், அச்சுறுத்தல், மரியாதைக் குறைவாக நடத்தல், நிர்ப்பந்தமான தனிமைப்படுத்தல் (உ-ம் குறித்த ஒரு நபர், உறவினர் மற்றும் நண்பர்களுடன் கதைப்பதைத் தடுத்தல்) என்பனவற்றை உள்ளடக்கலாம்.

**5. பாலியல் தொந்தரவு:**

இத்தகைய துன்புறுத்தலானது உடலியல் ரீதியான தொடர்பற்ற வகையில் நடைபெறும் எல்லா வகையான பாலியல் தொந்தரவையும் உள்ளடக்கும். இவை தேவையற்ற வகையில் ஏற்படுத்தப்படும் கவனயீர்ப்பு - உடல்மொழியாகவோ, எழுத்து வடிவிலோ பாலியலுக்கான அச்சுறுத்தும் நோக்கிலான கோரிக்கை என்பனவற்றைக் குறிக்கும்.

**6. வீட்டு வன்முறை:**

பால்நிலை அடிப்படையிலான உடலியல் மற்றும் உளவியல் ரீதியான துன்புறுத்தலை குடும்பத்தில் உள்ள பெண்கள், சிறுவர்கள் மற்றும் ஏனைய நலிவுற்றவர்கள் மீது மேற்கொள்ளும் வன் முறைகளைக் குறிக்கும்.

**7. வஞ்சக் கடத்தல்:**

ஒரு நபரைப் பலவந்தப்படுத்தி வலுக்கட்டாயமாக அல்லது ஏமாற்றிக் கடத்தல். அத்துடன் அவர்களைச் சுரண்டல் அல்லது பாதிப்படையச் செய்யும் செயலுக்குட்படுத்தல். வலுக்கட்டாயமாக, ஏனைய முறைகளில் அவர்களைத் தவறாகப் பயன்படுத்தும் நோக்கில் கட்டாயப்படுத்தி, உள்ளூருக்குள்ளோ, மாகாண ரீதியாக அல்லது வேறு நாட்டிற்கோ ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டுசெல்லல், இடமாற்றல் என்பனவற்றை உள்ளடக்கிய செயற்பாட்டாக அமையும்.

## பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை கையாளும்

**1.1** குடும்பம் (தனி,கூட்டு), அயலவர்கள், ஏனையோரால் முறைப்பாடு

**1.2** ஊழியர்கள், குடும்பத்தவர்கள், உறவினர்கள் ஆகியோரின் அவதானம் (உடல், உளரீதியானது)

சந்தேகம் → உறுதிப்படுத்தல்

தப்பிப்பிழை
கோ

**2** மதிப்பீடும் ஆரம்பத் திட்டமிடலும்

தப்பிப்பிழைத்தவரின் விளக்க ஒப்புத

- **2.1** உடல், உளவியல் முதலுதவி
- **2.2** நெருக்கடி நிலையில் தலையீடு
- **2.3** சிறுவர், பெண்கள் அபிவிருத்திப் பிரிவு (மாவட்ட, பிரதேச செயலகம்)
- **2.4** உளசமூக ஆதரவு, உளவளத்துணை
- **2.5** மருத்துவ சேவை

**3** முழுமையான மதிப்பீடு

- **3.1** இணக்கத்தை ஏற்படுத்தல்
- **3.2** சம்பவ மகாநாடு (சம்பவம் தொடர்பான கலந்துரையாடல்)
- **3.3** ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கான அ
(உ—ம்: பிள்ளைகள்)

**4** பா.அ.வ இன் மூலகாரணத்தைக் கண்டுபிடித்தலும் ம

- **4.1** உளசமூக சேவை
- **4.2** பாதுகாப்பு வழங்கல்
- **4.3** வாழ்வாதார, பொருளாதார மேம்பாடு
- **4.4** தொடர் நடவடிக்கை மற்றும் மாற்று வழிமுறைகள்

தடுப்பு
1. விழிப்புணர்வு (நாடகம்
2. பயிற்சி அளித்தல் (ப
3. சட்ட ஏற்பாடுகளை ந
4. பெண்களை வலுவூட்
5. பிரேரணைகளும் பரிந்
6. வன்முறை ஏற்படுத்து
7. சமூகம், குடும்பம், பா
மனப்பாங்குகளை ஊ
8. வன்முறை உள்ள உ
பாதுகாத்தல்.

பா.அ.வ கையாளுவதற்கான நியம செயற்பாட்டு படிமுறைகளில் குறிப்பிட்டுள்ள தலையீட்டு ஒழுங்கு முறைகளினை தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்திக்கொள்ளலாம் (ஒழுங்கு முறைகளுக்கு ஊடாக செல்ல வேண்டிய தேவைப்பாடு இல்லை)

ாளும் பணியாளர்களுக்கான நியம படிமுறைகள்




SHANTHIHAM
Association for Health & Counselling

## பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் கையாளுவதற் கான நியம செயற்பாட்டுப் படிமுறை விளக்கம் (SOP)

### 1.0 ஆரம்பத் தொடர்பு

பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (பா.அ.வ) முகங்கொடுத்துக் கொண்டிருப்பவர் தனக்கு ஏற்பட்ட பாதிப்பு களிலிருந்து மீள்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளும் முறைப்பாடு செய்யும் ஏனைய முறைகளும்.

### 1.1 குடும்ப (தனி, கூட்டு), அயலவர்கள், ஏனையோரால் முறைப்பாடு

பா.அ.வ ஆல் பாதிக்கப்பட்டிருக்கும் நபர் தொடர்பான தகவல்களை ஏனைய குடும்ப அங்கத்தவர்கள், அயலவர்கள், சமூகமட்ட அமைப்புகள் மற்றும் ஏனையோரால் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் (WDO) மற்றும் பொருத்தமான அமைப்புகளுக்கு முறைப்பாடு செய்தல்/ தெரியப்படுத்தல். (WDO) பிரதான சம்பவ முகாமையாளராக இருப்பினும் ஏனைய துறைசார் உத்தியோகத்தர்கள் தமக்குரிய பங்கினையும் ஆதரவினையும் வழங்குதல்.

### 1.2 ஊழியர்கள், குடும்பத்தவர்கள், உறவினர்கள் ஆகியோரின் அவதானிப்புகள் (உடல், உள ரீதியானது) சந்தேகத்தை உறுதிப்படுத்துதல்.

தப்பிப்பிழைத்தவர் தனது வேறு தேவைகளுக்காக உத்தியோகத்தர்களைச் சந்திக்கவேண்டிவரலாம். உத்தியோகத்தர், தப்பிப் பிழைத்தவரைச் சந்திக்கும்போது அவரில் காணும் காயங் களையும் முகபாவங்களையும் மற்றும் உளவியல் நிலைமைகளையும் அவதானிப்பார். இந்த அடையாளங்கள் குடும்ப உறவைப் பற்றிய சந்தேகங்களை எழுப்பலாம். இவை உத்தியோகத்தர் மேலும் ஆராய்ந்து உறுதிப்படுத்தவேண்டிய தேவையை எழுப்பலாம்.

### 1.3 தப்பிப்பிழைத்தவர் உதவி கோருதல்

பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு முகங் கொடுத்துத் தப்பிப்பிழைத்தவர், நேரடியாக உதவி வழங்குபவரிடம் சென்று தனக்கு ஏற்பட்ட பாதிப்புகளை அல்லது ஆபத்துகளை உதவி வழங்குபவரிடம் எடுத்துக்கூறி அதிலிருந்து தன்னைப் பாதுகாக்கக் கோருதல்.

### 1.4 மேலிடத்திலிருந்து தகவல் வழங்கல்

உயர் அதிகாரிகளினால், அல்லது அவசர தொலைபேசி அழைப்பின் முறைப்பாடுகள், அறிவுறுத்தல்களை (உள்ளூர், தேசிய வேலையாளுக்கு (சேவை அளிப்பவருக்கு) ஆராய்ந்து பா.அ.வ.ஆல் பாதிப்படைந்து இருக்கக்கூடியவருக்கு சேவைகளை அளிக்கப் பணிக்கப்படுதல்.

### 1.5 அமைப்புகள் அல்லது சகபாடிகள் மூலமான கையளித்தல்கள்

சேர்ந்து பணி செய்பவர் அல்லது நிறுவனம் பா.அ.வ.க்கு உள்ளானவரை ஆதரவுக்கும் சேவைக்குமாகக் கையளித்தல்.

### 2.0 மதிப்பீடும் ஆரம்பத் திட்டமிடலும்

மதிப்பீட்டாளர் தன்னை தயார்ப்படுத்துதலும் உதவி பெறுபவரை தயார்ப்படுத்துதலும் இவற்றுள் அடங்கும். மதிப்பீட்டாளர் தீர்ப்பிடாது, முத்திரை குத்தாது, திறந்த மனதோடும், உணர்ச்சிகளை வெளிப்படுத்த ஊக்குவிக்க வேண்டும். உணர்ச்சிகளைச் சுதந்திர மாக வெளிப்படுத்துவதை உறுதி செய்வதும் அவசியம். (பல சமுதாயங்கள் தங்கள் கலாசாரங்களையும், விழுமியங்களையும் பின்பற்றும் ஒவ்வொருவரும் தாங்கள் கட்டுப்பாட்டுடனும், உறுதியாகவும், பாதுகாப்பாகவும், மரியாதையோடும் இருக்கும் வகையில் நடத்தப்படுவதையே விரும்புகின்றனர்.)

இருப்பினும் ஒரு பாதுகாப்பான சூழலையும், அக்கறையையும், உன்னிப்பான செவிமடுத்தலையும், ஆதரவையும் வழங்கி பணிசெய்பவர் பிரசன்னமாக உடனிருக்கும்போது அவர்கள் தங்களது உணர்ச்சிகளைப் படிப்படியாக வெளிப்படுத்துவர். இவ்வாறு தங்களது உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடிய நம்பிக்கையூட்டும் ஓர் உறவைக் கட்டியெழுப்புவதும் பணிசெய்பவரின் தார்மீகப் பொறுப்பாகும்.

கீழ்வரும் அனைத்து விடயங்களும் தப்பிப்பிழைத்தவரின் விளக்க ஒப்புதலுடன் அமுல்படுத்த வேண்டிய விடயங்கள்.

**குறிப்பு:** சேவைகள் மற்றும் தேவைகள் அடிப்படையில் ஒன்றாக அல்லது பல ஒரே காலத்தில் அல்லது படிப்படியாக வழங்கப்படலாம்.

## 2.1 உடல், உளவியல் முதலுதவிகள்

### உடலியல் முதலுதவி

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தவர் ஆபத்தான சூழ்நிலையில் அகப்பட்டிருக்கும் பட்சத்தில் அவரை அதிலிருந்து அப்புறப்படுத்தி, உடலில் ஏற்பட்ட காயம் (உள்/ வெளி), முறிவு, எரிகாயம், வீக்கம் போன்றவற்றுக்கு உடனடி முதலுதவியும் தேவையானபொழுது மருத்துவமனைக்கு அனுப்புதலும்.

### உளவியல் முதலுதவி

தப்பிப்பிழைத்தவருடன் உடனிருந்து, செவிமடுத்து, கருணையாகவும், பரிவாகவும் அவரை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஆற்றுப்படுத்த முயற்சித்தல்.

## 2.2 நெருக்கடி நிலையில் தலையீடு

தேவை ஏற்படும்போது அவருக்கு உணவு, உடை, சுத்தமான

நீர், பிள்ளைகள் பராமரிப்புக்குத் தேவையான பொருத்தமான சூழ் நிலை மற்றும் பாதுகாப்பு, பொருளாதார வசதி, வதிவிடம் போன்றவற்றை ஏற்படுத்துதல்.

### 2.3 சிறுவர், பெண்கள் அபிவிருத்திப் பிரிவு (மாவட்ட, பிரதேச செயலகம்)

மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், மாவட்ட வைத்திய சாலை ஆகிய நிலையங்களிலும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களுக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

### 2.4 உளசமூக ஆதரவு, உளவளத்துணை

தப்பிப்பிழைத்தவர், அவரது குடும்பத்தினர் ஆகியோருக்குத் தேவையான ஆதரவினை சமூகத்தினரிடமும் ஏனைய குடும்ப உறவினரிடமிருந்தும் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல். சில சமயம் குடும்ப உளசமூக ஆதரவினைத் திரட்டுதலும் வேண்டும்.

**உளவளத்துணை** என்பது தொடர்பாடல் வழியாக மனதை வளப்படுத்தும் ஒரு சிகிச்சையாகும். ஒருவரின் பிரச்சினையைக் கேட்பதன் வழியாகவும், அவர்கள் தங்களைப் பற்றிக் கதைக்க வழிசமைப்பதன் மூலமாகவும் உதவுபவர் அவருக்கு உதவி அளிக்கிறார். இது ஆலோசனை கொடுப்பது போன்றதோ, அன்றேல் வழிமுறைகளைக் காட்டுவது போன்றதோ அல்ல. இருப்பினும் வெறுமனே உன்னிப்பாகக் கேட்பதோ அல்லது உளச்சிகிக்சை அளித்தலோ எப்போதும் பயனளிக்கக்கூடியதல்ல. ஒருவர் எப்போது தனது பிரச்சினைகள் பற்றி விழிப்புணர்வு கொள்கின்றாரோ, அப்போது தான் இவை பயனளிக்கும். செவிமடுத்தலின் வழியாக ஒருவர் பயன் பெறமுடியாவிடில், வேறு வகையான சிகிச்சை முறைகளை, உதாரணமாக, குடும்பச் சிகிச்சை, குழுச்சிகிச்சை அல்லது நடத்தைச்

சிகிச்சை போன்றவற்றை மாற்றுச் சிகிச்சையாகப் பயன்படுத்தலாம். சிலர் தங்கள் உணர்ச்சிகளை சித்திரம், சங்கீதம், விளையாட்டு, வரைதல், நாடகம் போன்றவை ஊடாகக் கூடுதலாக வெளிப்படுத்துவர்.

சில சந்தர்ப்பங்களில் மிகவும் கூடுதலாகக் கதைப்பவர் களையும் நீங்கள் சந்திக்கலாம். இந்த வேளைகளில் அவர்களின் உரையாடலை நீங்கள் கட்டுப்படுத்துவது அவசியமாகிறது. தப்பிப்பிழைத்தவர்களின் குடும்ப இயக்கவியலை சீர்செய்வதற்கும் அவ்விடத்தை நிரப்புவதற்கும் தேவையான தற்காலிகமான மனநிலை மற்றும் பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு உறுதிப்படுத்தத் தேவையான வாய்ப்புகளையும் உதவிகளையும் வழங்குதலும், குடும்ப மற்றும் உறவினர்களின் ஆதரவினையும் பெற்றுக் கொடுப்பதோடு, அவர்கள் மீண்டெழும் தன்மையை மேம்படுத்துவதனூடாக உளசமூக நன்னிலையை மேம்படுத்த முயற்சித்தல். இச்சேவையானது தேவையேற்படின் இடைநிலை மற்றும் நீண்டகால தலையீட்டின் போதும் வழங்கலாம்.

### 2.5 மருத்துவ சேவையினைப் பெற்றுக் கொடுத்தல்

தப்பிப்பிழைத்தவர்களுக்கான மருத்துவ உதவிகளைப் பெற்றுக் கொடுத்தலை உறுதிப்படுத்தல்.

- தப்பிப்பிழைத்தவரின் ஒப்புதலுடன் அவருக்கான உடலியல் பரிசோத னையை மேற்கொள்ளல்.

- சட்டத்தின்படியும் உச்ச நீதிமன்றத்தின் சட்டக்கோவைக் கேற்பவும் தப்பிப்பிழைத்த பெண்ணை மதித்து உடலியல் பரிசோதனைகளைச் செய்வதும், சிகிச்சை செய்வதும் ஒரு பெண்ணினால் மேற்கொள்ளப் படுதல் வேண்டும்.

• உடற்கூற்றுப் பரிசோதனை செய்வதுடன் சிகிச்சையையும் வழங்குதல்.

• உளவியல் முதலுதவி வழங்குவதுடன் தப்பிப் பிழைத்தவரை மையமாகக்கொண்ட உளவியல் மற்றும் உளசமூக பராமரிப்புச் சேவைகளை வழங்குதல்.

• காயங்களை ஆவணப்படுத்துவதுடன் தடயவியல் தொடர்பான ஆகக் குறைந்த ஆதாரங்களைச் சட்டத் தேவைகளுக்காகத் திரட்டிக் கொள்ளுதல்.

• தப்பிப் பிழைத்தவருடன் உடனடியான பாதுகாப்பு விடயங்களை கலந்துரையாடுவதுடன் பாதுகாப்புத் திட்டம் ஒன்றையும் வகுத்தல்.

• தேவையுள்ளவர்களுக்கு ஏனைய சேவைகளுக்கான பாதுகாப் பானதும் இரகசியமானதுமான கையளித்தல்களை வழங்குதல்.

• எல்லாச் செயற்பாடுகள் மற்றும் கையளித்தல்களுக்கு கவனமான, எழுத்து மூலமான ஆவணங்களைப் பின்பற்றுவதுடன் தொடர் கவனிப்புக்கும் வசதிப்படுத்துதல்.

• மேற்பார்வையாளர் முன்னரே துணைநாடியின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கிணங்க மருத்துவ, சமூக, சட்டம் மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கென பொருத்தமானவர்களுக்கு வழிப்படுத்துதல். அத்துடன் தப்பிப்பிழைத்தவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்குறித்த சேவை வழங்குநரின் தொடர் கவனிப்புக்கும் உதவுதல்.

• பாதிக்கப்பட்டவரின் விசேட ஆரோக்கிய தேவைகள் (தப்பிப் பிழைத்தவர்) கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

## 2.6 பாரம்பரிய வளங்கள்

எமது பிரதேசங்களில் பாரம்பரியமாக குருக்கள், மௌலவி, பாதிரிமார், அருட்தந்தை, அருட்சகோதரி, பரிகாரிமார், சித்த ஆயுள்வேத வைத்தியர்கள், சோதிடர்கள், மாந்திரீகர், பேயோட்டுபவர், மைபோட்டுப் பார்ப்பவர், வாக்குக் கூறுபவர், கட்டுச் சொல்லுபவர், நூல் கட்டுபவர், மருத்தீடு விழுத்துபவர், சாந்தி செய்பவர், காவல் செய்பவர், முகப்பூச்சு செய்பவர், கண்ணூறு கழிப்பவர், பார்வை பார்ப்பவர், திருஷ்டி கழிப்பவர், கழிப்புக் கழிப்பவர், செய்வினை எடுப்போர் எனப் பல வகைப்பட்ட உதவியளிப்போர் காணப் படுகின்றனர்.

இவர்கள் சிலவேளைகளில் மிகத் திறமையான வழிகாட்டல் மற்றும் உளவளத்துணை அளிக்கின்றார்கள். அவர்கள் தம்மிடம் வருவோர் சொல்பவற்றைக் கேட்டு ஆலோசனை, ஆதரவு வழங்குகின்றார்கள். இவர்கள் ஊர் மக்கள் விளங்கக்கூடியவகையில் தெளிவாகவும், வெளிப்படையாகவும், இயல்பாகவும் அவர்கள் ஏற்கக் கூடியவகையில் நன்மை பயக்கக்கூடியதாக செயற்படுகின்றார்கள்.

இவர்களின் அணுகுமுறைகளினால் குடும்பத்தின் மற்றும் சமுதாய இயக்கமுறையில் ஏற்படும் மாற்றங்களும், அவர்கள் மத்தியில் சுமூகமான நட்புறவை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் அமைவதும் இவர்களின் தேவையின் முக்கியத்துவத்தை யதார்த்தமாக உணர்த்துகின்றது. இச்சேவையானது தேவையேற்படின் இடைநிலை மற்றும் நீண்டகாலத் தலையீட்டின்போதும் வழங்கலாம்.

## 2.7 புகலிடம்

தப்பிப்பிழைத்தவரின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தேவையிருப்பின் உடனடியாக (அச்சுறுத்தல் தொடர்ந்தால்) அவருக்கு மேலும் பாதிப்பு ஏற்படாமல் பிரதேச செயலர் பிரிவிலுள்ள

பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசில் பிரதேச செயலர் நீதிமன்ற அனுமதியோடு தப்பிப்பிழைத்தவரைத் தற்காலி கமாக பாதுகாப்பான புகலிடம் (Safe House) ஒன்றுக்கு அனுப்புதல். புகலிடம் என்பது உறவினர் ஒருவரின் வீடு அல்லது வைத்தியசாலை அல்லது தங்குமிடம் போன்ற ஒன்றாக இருக்கலாம்.

## 2.8 பாதிப்பை ஏற்படுத்தியோருக்கான செயற்பாடு

பாதிப்பை ஏற்படுத்தியவர்களுடன் கலந்துரையாடி வன் முறையின் தாக்கத்தை விளங்கப்படுத்துவதும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவசியம். பாதிப்பை ஏற்படுத்தியவரின் பிரச்சி னையின் நிமித்தமாக பின்வரும் நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

- நட்புதவி வழங்கல் (Befriending).
- உளவளத்துணை வழங்குதல்.
- மதுப்பழக்கத்திலிருந்து விடுபட வழிகாட்டுதல்.
- உளமருத்துவ மையத்துக்கு அனுப்புதல்.
- பிரச்சினைக்கான மூலகாரணத்தை ஆராய்ந்து அதற்கான உதவிகளை வழங்குதல்.

## 2.9 காவல்துறையின் பெண்கள், சிறுவர் பிரிவு

தப்பிப் பிழைத்தவரை அவரது நெருக்கடியான சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்டெடுப்பதற்கும், உயிர் அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்திலும் காவல்துறையின் பெண்கள், சிறுவர் பிரிவின் உதவியை நாடுதல். இச்சேவையானது தேவையேற்படின் இடைநிலை மற்றும் நீண்டகாலத் தலையீட்டின் போதும் வழங்கலாம்.

## 3.0 முழுமையான மதிப்பீடு

தப்பிப்பிழைத்தவருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பில் (உதாரண மாக உடல், உள, குடும்ப, சமூக, பொருளாதார, கலாசார, ஆன்மீக ரீதியில்) மீண்டு தனது அன்றாட வாழ்க்கை முறைக்குத் திரும்பு

வதற்கான உதவியளித்தலினை ஒன்றுசேர வழங்கும் வகையில் உடனடிநடவடிக்கைக்குப் பின்னர் முழுமையான மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம். இதன் மூலமாக தப்பிப்பிழைத்தவருக்கான பின்வரும் இடைக்காலத் தலையீடுகளினை மேற்கொள்ளமுடியும்.

### 3.1 இணக்கத்தை ஏற்படுத்துதல்

தப்பிப்பிழைத்தவர் பாதிப்பின் கனதியை கருத்திற்கொண்டு நேரடியாகச் சென்று ஊர்ப் பெரியவர்களுக்கு முறைப்பாடு செய்து பாதிப்பினை மேலும் அதிகரிக்காமல் சம்மந்தப்பட்டவர்களுடன் அணுகி அவர்களுக்கிடையில் ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி சுமுகமான நிலையைத் தோற்றுவித்தல். தப்பிப்பிழைத்தவர்களும் பாதிப்பை ஏற்படுத்தியவர்களும் இணக்கசபைக்குச் சென்று அங்கு உரிய சுமூகமான இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 3.2 சம்பவ மகாநாடு (சம்பவம் தொடர்பான கலந்துரையாடல்)

இந்தத் தப்பிப்பிழைத்தவரின் உடல், உள, குடும்ப சமூக ஆன்மீக நலனை கருத்திற்கொண்டு அவரது பிரச்சினையைக் கையாளும் அனைத்துத் துறைசார் உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்து தப்பிப்பிழைத்தவர்களுக்கு வழங்கவேண்டிய வளங்களைச் சரியான முறையில் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் பொறுப்பெடுத்து அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வதற்கு ஒன்றிணைந்து முயற்சி செய்தல்.

### 3.3 ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கான ஆதரவு

தப்பிப்பிழைத்தவர் சிலவேளைகளில் வைத்தியசாலை அல்லது புகலிடத்திற்கு அனுப்பப்பட்டால் ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்குப் பாதுகாப்பு, அடிப்படைத்தேவைகள், பிள்ளை களின் கற்றற்செயற்பாடுகள் போன்றவற்றிற்கு ஆதரவு அளித்தல் வேண்டும்.

### 3.4 சட்ட உதவி

சட்ட ரீதியான உதவியைப் பெறுவதற்கு இலவச சட்ட மையங்கள் மற்றும் சட்ட வல்லுநர்களை நாடுவதற்கு உதவுதல், வழிகாட்டுதல்.

### 3.5 தப்பிப்பிழைத்தவர் / சாட்சியாளருக்கான பாதுகாப்பை உறுதிப் படுத்துதல்

தப்பிப்பிழைத்தவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு சிலவேளைகளில் சாட்சி சொல்லும் நபரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## 4.0 பா.அ.வ இன் மூலகாரணத்தைக் கண்டுபிடித்தலும் மாற்று யுக்திகளும்

தப்பிப் பிழைத்தவருடனான சந்திப்புகளின்போதும் மற்றும் பாதிப்பை ஏற்படுத்தியவருடனான சந்திப்புகளின்போதும், ஏனைய வர்கள் மூலமாகப் பெற்றுக்கொண்ட தகவல் அடிப்படையில் மூலகாரணங்களைக் கண்டுகொள்ளுதலும், தீர்வு மற்றும் மாற்றுச் செயற்பாடுகளைக் கையாளுதலும்.

### 4.1 உளசமூக சேவை

உளவளத்துணை, ஆற்றுப்படுத்தல் மற்றும் குடும்ப, சமூக ஆதரவை ஏற்படுத்தி தப்பிப் பிழைத்தவரை வலுப்படுத்தி சமுதா யத்துடன் இணைத்தல். பாதிப்பு ஏற்படத்தியவரையும், தப்பிப்பிழைத்த வரையும் புதிய கோணத்தில் சிந்திக்க வைத்து செயற்படத் தூண்டுதல் மற்றும் குடும்ப இயக்கப்பாட்டைச் சீர்செய்வதனூடாக சுமூகமான மீள் இயங்கு நிலைக்குக் கொண்டுவருதல்.

### 4.2 பாதுகாப்பு வழங்கல்

தப்பிப்பிழைத்தவர் பாதுகாப்பான வாழ்வை வாழ்கின்றாரா

என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவருக்குக் கிடைக்கவேண்டிய சட்டரீதியான செயற்பாடுகளிலுள்ள முன்னேற்றம், பாதுகாப்பான வாழ்விடம் மற்றும் குடும்ப, சமூக ஆதரவைப் பெற்றுக்கொடுப்பதுடன் உளரீதியான பாதுகாப்பைப் பெறுகின்றமையை உறுதிப்படுத்தல்.

### 4.3 வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாடு

தப்பிப்பிழைத்தவரின் பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு அதனை முன்னேற்றும் முகமாக அவரது திறன்களுக் கேற்பவும் மற்றும் திறன் விருத்திக்குப் பின்னரான பொருத்தமான வாழ்வாதார உதவிகளைப் (வருமானம் உருவாக்கும்) பெற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களூடாக பொருளாதார நிலையில் ஏனையவரில் தங்கியிருக்காத நிலையை/சுதந்திர நிலையை உறுதிப்படுத்தல்.

### 4.4 தொடர் நடவடிக்கை மற்றும் மாற்று வழிமுறைகள்

தப்பிப்பிழைத்தவர்களின் வாழ்வு நல்ல நிலையில் உள்ளதா என உறுதிப்படுத்தி, குறித்த சம்பவ முகாமையாளர் குறிப்பிட்ட காலம் தப்பிப்பிழைத்தவரின் முன்னேற்றத்தின் நிலைத்து நிற்கும் நிலையை தொடர் கண்காணிப்பு ஊடாக உறுதிப்படுத்துதல். முன்னேற்றமற்ற அல்லது முன்னேற்றம் குறைந்தளவில் காணப்பட்டால், நிலைமையைத் தப்பிப்பிழைத்தவரின் உறவினருடன் கலந்து மீளாய்வு செய்து மாற்றுவழிகளைத் தெரிவுசெய்து முயற்சிக்கவும். இவ்வாறு தொடர்ந்து பரீட்சித்து மீளாய்வு செய்து பின்னூட்டல் (feedback) மூலம் மாற்றியமைத்து, நல்ல தீர்வை அடையலாம்.

### 4.5 தடுப்பு

பால்நிலை அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கு சுயவிழிப்புணர்வுச் செயற்பாடுகள் ஊடாக மக்களின் மத்தியில்

மனநிலை மற்றும் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தி ஒரு புரிந்துணர்வு மற்றும் ஆரோக்கியமான குடும்பம், சமூகத்தை மேம்படுத்துதல். அதற்காக விழிப்புணர்வுக் கருத்தரங்கு (வீதி நாடகம், சிறு கலந்துரையாடல், துண்டுப் பிரசுரம், பதாதைகளைக் காட்சிப்படுத்தல்) மற்றும் அனைத்து ஊடகங்கள் ஊடாகவும் வெளிப்படுத்துதல். பயிற்சிகள், சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், பெண்களை வலுவூட்டல், பிரேரணைகளும் பரிந்துரைகளும் மேற்கொள்ளல். மேலும் தப்பிப் பிழைத்தவர்கள், பாதிப்பை ஏற்படுத்தியவர்கள், குடும்பங்கள், சமூகம் போன்றவர்களின் விழுமியங்கள், மனப்பாங்குகள், அனுபவங்கள், சவால்கள் என்பவற்றினை கருத்தில் கொண்டு ஈடுபடுவதன் ஊடாக பால்நிலை வன்முறைகளைத் தடுக்கலாம்.

1) சிறுவயதில் இருந்து குடும்பத்திலும் சமூகத்திலும் சிறுவரைப் பராமரித்தல், கலாசாரச் செயற்பாடுகள், கலை ஆக்கங்கள் போன்றவற்றில் பெறுமதி வாய்ந்த பங்களிப்பாளராக பெண்களை மதிப்பதற்குத் தொடர்ந்து விழிப்புணர்வையும் கற்பித்தலையும் ஏற்படுத்துதல்.

2) பாதிப்பை ஏற்படுத்தியவருடன் கீழ்க்குறிப்பிடப்பட்ட வழிகளின் ஊடாக தலையீடுகளை மேற்கொள்ளல்.

அ) பாதிப்பை ஏற்படுத்தியவர் குடிக்கு அடிமையானவராயின் உளவளத்துணை மற்றும் புனர்வாழ்வின் ஊடாக கட்டுப்படுத்துதல். இதனூடாக வன்முறையைத் தூண்டுதலைக் குறைத்துக்கொள்ளலாம். சூழ்நிலைக்கு ஏற்றவாறு உறவினரின் ஆதரவினைப் பெற்றுக் கொடுத்தல்.

ஆ) பால்நிலை வன்முறை நடத்தைக்கோலமானது சூழலில் இடம்பெற்ற வன்முறைசார்ந்த போர் மனவடுவுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

இ) பாதிக்கப்பட்டவரின் ஞாபகங்களை நல்ல முறையில் அணுக உதவி செய்தல், மற்றும் நாளாந்த வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் கையாளுவதன் மூலம் வன் முறையைக் குறைக்கலாம் அல்லது இல்லாது ஒழிக்கலாம். பாதிப்பை ஏற்படுத்தியவரை உளவளத்துணையாளருடனும், சமூக பெரியோர் கள், சமய முக்கியஸ்தர்கள் போன்ற மற்றும் அனுபவசாலிகளுடனும் (வன் முறையில் இருந்து விடுபட்ட, வாழ்க்கையில் அனுபவம் மிக்கவர்களுடன்) இணைத்துவிடல்.

ஈ) ஒரேவிதமான வன்முறைகளுக்கு உட்பட்டு மீண்ட நபர்களுடன் எவ்வாறு மீண்டார்கள் என அனுபவப்பகிர்வின் மூலம் ஏனையவர்களையும் விடுபட ஏற்பாடு செய்தல்.

3) சூழலில் பால்நிலை மனப்பான்மை செயற்பாட்டுடன் கூடிய அளவு வேலை செய்தல்.

பாதிப்பை ஏற்படுத்தியவருக்கு பெண்களை அடித்தல் மனித உரிமை மீறல் செயற்பாடாகும், பெண்ணை அடிப்பது ஆணை அடிப்பதற்குச் சமமானது என்ற எச்சரிக்கையை, மதிப்பளிப்பதன் ஊடாக பொருத்தமான முறையில் சொல்லல். பால்நிலை அடிப்படையிலான வன்முறையை ஏற்படுத்தும் சமநிலையற்ற உயர்வு தாழ்வு உறவாடல்களின்மீது சமூகத்தினை ஈடுபடுத்துதல். சமூகத் திலும் குடும்பத்திலும் பெண்களின் சமத்துவத்தின் தேவை பற்றி தெரு நாடகங்கள், பயிற்சிப்பட்டறை என்பவற்றின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல். அடிப்படைக் கலாசார நம்பிக்கையான “பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு பெண்கள் தான் காரணம்” என்ற கருத்துக்குச் சவால் விடுதல். சிறுவயது முதல் எச்சரிக்கை செய்தல், பெண்களை அடிப்பது நல்ல மனிதப் பண்புகளுக்கு உகந்ததல்ல என ஆண்களுக்கு விளங்கப்படுத்தல்.

**சேவைகளை பெறக்கூடிய மற்றும் அணுகக்கூடிய அரசசார்பற்ற நிறுவனங்கள்**

- Women Action Network (WAN) 0776043039
- தேவை நாடும் மகளிர் அமைப்பு 021 222 9671 (யாழ்ப்பாணம்)
  Women in Need (WIN)
- புகலிடம் (Safe House) 021-222 3699 (யாழ்ப்பாணம்)
  021-300 3855 (கிளிநொச்சி)
- பெண்கள் மற்றும் அபிவிருத்தி நிலையம் 021-222 4398
  Center for Women Development (CWD)

பால்நிலை வன்முறைகள் அதிகரிப்பதற்கு பாரம்பரிய கொள் கைகளில் உள்ள சில குறைபாடுகள் (சீதனப் பிரச்சினை) என்பவற்றைக் கலந்துரையாடல், பட்டிமன்றங்கள், விழிப்புணர்வுகள் மூலம் எதிர்காலத்தில் இல்லாமல் செய்ய இளைய தலை முறையினருக்கு பாடசாலைக் கல்வியின்போது தெரியப்படுத்தல். பெண்கள் ஆண் களைவிட குறைந்தவர்கள் என்ற காலங்காலமான கண்ணோட்டம் காரணமாக, பால்நிலை வன்முறையில் ஈடுபடுகின்றார்கள் என்பதனை விளங்கப்படுத்தல்.

4. பாதிக்கப்பட்டவருக்கு உளப்பிரச்சினைகள் இருக்கின்றதா என்பதனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தல். பிரச்சினைகள் இருந்தால் குடும்ப, சமூக ஆதரவினைப் பெற்றுக்கொடுத்தல். பாடசாலைகளிலும் பால்நிலை வன்முறையினை குறைத்துக் கொள்வதற்கு தொடர் திட்டங்களை முன்னுரிமைப்படுத்த வேண்டும். சிறு வயது முதலே பிள்ளைகளுக்கு பால்நிலை வன்முறை பற்றி அவர்களுக்கு விளங்ககூடிய வகையில் அதனை நீண்டகாலத்தில் இல்லாமல் செய்ய கல்வித்திட்டத்தில் உள்வாங்கிக்கொள்ளுதல். (விழிப்புணர்வு, தொடர்கண்காணிப்பு ஊடாக ஆண்கள், பெண்கள் இருவருக்கும் சம்மந்தப்பட்டவர்களினால் நடாத்துதல்).

5. பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய விழிப்புணர்வை அதிகரித்து உளரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்கள், கணவனை இழந்தவர்கள், இல்லங்களில் உள்ள தாய், தந்தையரை இழந்த பிள்ளைகள், பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு உட்படும் நிலையான வருமானமற்ற பெண்கள் போன்றோர் மீது தனியான சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும். பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு முன்னர் பாதிப்புக்கு உட்பட்டோருக்கு உளவியல் விழிப்புணர்வினை அதிகரிக்க வேண்டும். ஏனெனில் இவர்களே எதிர்காலத்தில் திரும்பவும் புதிய வன்முறை வட்டத்துக்குள் சிக்கும் நலிவுற்ற நிலையில் உள்ளவர்கள்.

6. சிக்கலான சம்பவங்களுக்கான நிபுணத்துவ ஆலோசனைகள் சிக்கலான சம்பவங்களில் திரும்பத் திரும்ப எடுக்கப்பட்ட தலையீடுகளும் முயற்சிகளும் பயனளிக்காதவிடத்து, மேற்பார்வையாளர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், அமைச்சு அலுவலர்கள், பெண்களின் விடயங்கள் தொடர்பான ஆலோசகர்கள் போன்ற அல்லது இதேபோன்ற நிபுணத்துவம் பெற்றவர்களின் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் நாடப்படலாம்.



## பின்னிணைப்பு

### வழிகாட்டல் கோட்பாடு

பா.அ.வ இல் இருந்து தப்பிப்பிழைத்தவர்களுக்கு சேவை வழங்குபவர்கள், நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு கோட்பாட்டின் பொதுவிளக்க வழிகாட்டலானது ஒழுக்கநெறிக்கான மனப்பாங்கு, நடத்தைமுறைமை மற்றும் கொள்கைகளை உள் வாங்கும்.

1. தப்பிப்பிழைத்தோர் மற்றும் அவர்களின் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலுக்கு முன்னுரிமை கொடுத்தல்.

2. தப்பிப்பிழைத்தோர் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் தொடர்பான இரகசியத்தன்மையை எப்போதும் பேணுதல்.

அ. தப்பிப்பிழைத்தோரின் சம்மதத்துடனேயே பொருத்தமான அல்லது தகுந்த சேவையாளருக்கான தகவல்களைப் பரிமாறலாம். உ-ம் உதவியாளர் உதவியளிக்க ஏனைய நிறுவனங்களில் இருந்து சேவையைப் பெற்று உதவுதல் போன்ற நோக்கத்திற்காக.

ஆ. தப்பிப்பிழைத்தோர் தொடர்பான எழுத்துமூலமான தகவல்கள் பாதுகாப்பாகப் பேணப்படுதல் வேண்டும்.

3. தப்பிப்பிழைத்தோரின் விருப்புகள், தெரிவுகள், உரிமைகள் மற்றும் கௌரவத்திற்கு மதிப்பளித்தல் வேண்டும்.

4. சில விசேட சந்தர்ப்பங்களில் (உ-ம்: அவர்களுக்கு அல்லது மற்றவர்களுக்கு உயிராபத்து அல்லது அச்சுறுத்தல், வன்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம்) அவர்களின் சம்மதமோ, சம்மதமின்றியோ உரிய அதிகாரிகளுக்கு தகவல் கொடுப்பது, நடவடிக்கை எடுப்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

5. தப்பிப்பிழைத்தோர் ஓர் பெண்ணாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவருடன் உரையாடல், பரீட்சித்தல், மொழிபெயர்ப்பு போன்றவற்றில் ஓர் பெண் உத்தியோகத்தர் இருத்தல் பொருத்தமானது. தப்பிப் பிழைத்தவர் ஓர் ஆணாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவரின் விருப்பு, உள்வாங்குதல் பொருத்தமானது. சிறுவர் தொடர்பான முறைப் பாடுகளுக்கு விசேட பயிற்சி பெற்ற பெண் உத்தியோகத்தர்கள் பொருத்தமானவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

**அ.** தீர்ப்பிடாத மனப்பாங்குடன் செயற்படுதல் அவசியமாகும். தப்பிப் பிழைத்தோரின் கலாசாரம், குடும்பம் அல்லது நிலைப்பாட்டை ஏளனம் அல்லது அவமதிப்பு செய்யக்கூடாது. மேலும் அவர்களது செயற்பாடுகளில் கவனமெடுத்தல் நன்று.

**ஆ.** பொறுமையுடன் இருத்தல் அவசியமானதாகும். தப்பிப்பிழைத் தவர் தனது அனுபவத்தைக் கதைக்கத் தயாரற்ற நிலையில் இருக்கும்போது மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு அவரை வற்புறுத்தக்கூடாது. தொடர்புடைய கேள்விகளை மட்டுமே கேட்டல் பொருத்தமானதாகும்.

**இ.** பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்படும் தப்பிப்பிழைத் தவருக்கு நடந்த அனுபவம் தொடர்பான நேர்காணல் மற்றும் திரும்பத் திரும்பக் கதைத்தல் என்பவற்றைத் தவிர்க்கவேண்டும்.

**ஈ.** நிறுவனம் மற்றும் சமூகத்தின் விருப்புகளுக்கு அப்பால் தப்பிப்பிழைத்தவரின் உயரிய விருப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

**உ.** "மேலும் பாதிப்படையாமல் தடுத்தல்" என்னும் கோட்பாட்டைப் பின்பற்றுதல் வேண்டும்.

தப்பிப்பிழைத்தவர்களுக்கு வழங்கப்படும் செயற்பாடுகளினால் அவரதும், அவரின் குடும்பத்தினரதும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையாத வகையில் அவர்களின் நன்மைக்கு முன்னுரிமை கொடுத்து உதவி வழங்குதல் (உ-ம்: பிள்ளைகள்)

**ஊ.** தப்பிப்பிழைத்தவர்கள் தமது வாழ்வு பற்றிய அல்லது அவரின் நலம் தொடர்பாக அவரே முடிவு எடுத்தல் முக்கியம்.

## இரகசியத் தன்மையைப் பேணுதல்

**அ.** தப்பிப்பிழைத்தோருடன் வேலை செய்யும்போது வர்க்கம், பால், வயது, சாதி, மதம் மற்றும் தொழில்நிலை சார்பாக எந்தவிதமான பாரபட்சமும் காட்டக்கூடாது.

**ஆ.** தப்பிப்பிழைத்தோர் தரமான சேவையைப் பெறுவதை முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

**இ.** ஆபத்து நிலையில் உள்ள முறைப்பாட்டுச் சம்பவங்கள் உடனடியாக கையாளப்பட வேண்டும்.

**ஈ.** பா.அ.வ மனித உரிமை மீறலாக கவனிக்கப்பட வேண்டும்.

## பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து தப்பிப்பிழைத்தவருக்கு கொடுக்கவேண்டிய தகவல்கள்

1. பால்நிலை அடிப்படையிலான வன்முறை (பா.அ.வ) இடம் பெற்றுள்ளது என்பதனை குறித்த நபருக்கு உணரவைத்தல்.

2. குறித்த சூழ்நிலையினை விளங்கப்படுத்துதல்.

3. விளைவுகளை விளங்கப்படுத்துதல்

**அ.** உடனடி மற்றும் நீண்ட கால விளைவுகள் (உடல், உள, குடும்ப, சமூக, பொருளாதார, கலாசார, ஆன்மீக அடிப்படையானவை.)

**ஆ.** அவர்களின் உரிமைகள் பற்றி விளக்குதல் (முடிவெடுத்தல், பாதுகாப்புப் பெற்றுக் கொள்ளல், முறைப்பாடு செய்தல், முறைப்பாடு செய்வதற்கு மறுக்கும் சந்தர்ப்பத்தில் முறைப்பாடு செய்வதன் அவசியத்தன்மையை எடுத்துரைத்தல், இரகசியத்தன்மை பேணப்படுதல்)

4. அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் பற்றி விளக்குதல்/ வழிகாட்டுதல்.

**அ.** உடனடிச் சேவைகள் - உளசமூக ஆதரவு, மருத்துவ சேவை, பாரம்பரிய வளங்கள், புகலிடம் (Safe house), காவல்துறை, உடல்-உளவியல் முதலுதவி, நெருக்கடி நிலையில் தலையீடு.

**ஆ.** நீண்டகால சேவைகள் - சமூகப் பெரியோர் (உறவினர், முதியோர்) மூலம் இணக்கம் காணுதல்; மத்தியஸ்தர், இணக்க சபை மூலம் இணக்கம் காணுதல்; பாரம்பரிய வளங்கள், உளசமூக ஆதரவு, உளவளத்துணை, காவல்துறை, சட்ட உதவி, சம்பவ முகாமைத் துவம், பாதிப்பை ஏற்படுத்தியவர்களுக்கான செயற்பாடு, ஏனைய குடும்பங்களுக்கான சேவை.

**குறிப்பு:**

❖ சேவைகளைப் பெற்றுக்கொள்வதன் சாதகமான, பாதகமான தன்மைகளை விளங்கப்படுத்தல் வேண்டும்.

❖ அவசர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அவசர தொலைபேசி இலக்கங்களை வழங்குதல்.

## தேசிய ரீதியிலான தொலைபேசி இலக்கங்கள்:

- பெண்களுக்கெதிரான வன்முறை- 1938
- அவசர பொலிஸ் உதவி - 119
- அவசர அம்பியூலன்ஸ் உதவி - 110
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை - 1929
- அரச உதவி - 1919
- தேசிய உதவி வழங்கும் பகுதி - 118

## மாவட்ட ரீதியிலான தொலைபேசி இலக்கங்கள்:

| | | |
|---|---|---|
| • அவசர அம்பியூலன்ஸ் உதவி | | 021-222 4444 |
| • உளம்சார் பிரச்சினை (நேயம்) | | 021-222 6666 |
| • இலவச சட்ட உதவி: | யாழ்ப்பாணம் | 021-222 4545 |
| | கிளிநொச்சி | 021-228 5618 |
| | முல்லைத்தீவு | 021-229 0077 |

## அ) திறனுள்ள உதவியாளருக்கு இருக்கவேண்டிய பண்புகள்

ஒரு திறனுள்ள உதவியாளராக இருப்பதற்குப் பின்வரும் பண்புகளை வளர்த்தெடுப்பது இன்றியமையாதது. உதவியளிக்கச் செல்லும் முன், உங்களைத் தயார் செய்யும் முகமாக இப்பண்புகளை நினைவூட்டிக்கொள்வதுடன், உதவியளிக்கின்ற வேளைகளில் எப்பொழுதும் இவற்றை மனதினில் வைத்திருக்கவும்.

## உதவியாளருக்குத் தேவைப்படும் ஆளுமை சார்ந்த பண்புகள்[2]

- உண்மையான கரிசனை
- தெளிவான சிந்தனை
- சாதாரணமான பொது அறிவு
- சுய விழிப்புணர்வு

- இதமான மனப்பாங்கு
- அமைதியான மனநிலை
- பொறுப்புணர்வு
- கணிப்பிடாத மனப்பாங்கு
- நேர்மையான வாழ்க்கை முறை
- இசைந்து கொடுத்தல்
- நேர்மை
- சுய நம்பிக்கை
- மற்றவரை மதித்தல்
- திறந்த மனநிலை
- பொறுமை
- ஹாஸ்ய உணர்வு/பகிடிகளை இரசிக்கக்கூடிய மன உணர்வு

Association for Health and Counsellin
"Shanthiham"
No.8.8/1 Katpahavinayagar Lane
Off Kachcheri Nallur Road,
Jaffna.

மற்றவருக்கு உதவியளிப்பவராக இருக்கும்போது, உதவியாளர் எவ்விதமான தப்பெண்ணங்களும் கொள்ளாமல், அவர்களை மதித்து, அவர்களுக்கு உதவியளிக்க முயற்சிக்க வேண்டும். ஓர் உதவியாளர் மற்றவர்களுடைய விருப்பு, வெறுப்புகளை ஏற்றுக்கொள்ளாதுவிடினும், அவர்களுடைய அபிலாஷைகளுக்கு மதிப்பும், கவனமும் கொடுக்க வேண்டும். அதேவேளை மற்றவர்களுடைய வாழ்க்கையை தீர்ப்பிடுவது உதவியாளர்களின் பணியல்ல. உதவியாளர்களாக இருப்பவர்கள் தாம் உதவியளிப் பவர்களுக்கு முழுமையான ஆதரவை அளிக்க வேண்டும். ஆனால் உதவி பெறுபவர்களுடைய முழுவாழ்க்கைக்கும் உதவியாளர்கள் பொறுப்பல்ல என்பதனையும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

**மற்றவர்களுக்கு உதவுதல்**

உளநலப் பிரச்சினைகளை உடையவர்களுக்கு உதவி யளிப்பதற்குப் பல படிமுறைகள் உள்ளன. இந்தப்படிமுறைகளைக் கட்டாயமாக, கீழே தரப்பட்ட ஒழுங்கினில்தான் பின்பற்ற வேண்டும்

என்ற தேவையில்லை. உதவி தேவைப்படுகின்ற ஒருவருக்கு உதவுகின்றபொழுது, தேவையையொட்டி, இவை எல்லாவற்றையும் ஒன்றுடனொன்று கலந்தும், தனித்தனியாகவும் பிரயோகிக்க வேண்டிவரும்.

1. இடவமைவு உதவியளிப்பதற்கான உகந்த சூழலை ஏற்படுத்துதல்.
2. உறவை வளர்ப்பதற்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்.
3. உன்னிப்பாகச் செவிமடுத்தல்.
4. தகவல்களுக்காகக் கிளறுதல்.
5. ஆதரவையும் ஆறுதலையும் அளித்தல்.
6. தன்னிறைவை ஊக்குவித்தல்.
7. குடும்ப மட்டத்தில் உதவியும் ஆதரவும் அளித்தல்.
8. பிரச்சினைகளைக் கணிப்பீடு செய்தல்.
9. உதவி பெறுபவரோடு சேர்ந்து செயற்றிட்டத்தை வகுத்தல்.
10. தொடர் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

### ஆ) பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை ஆவணப் படுத்தல்

சம்பவ முகாமையாளர் குறித்த சம்பவம் தொடர்பான முழுமையான செயற்பாடுகளுக்குமான ஆவணப்படுத்தலை மேற் கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளார். மேலும் குறித்த சம்பவக்கை யாளலுடன் பகுதியளவில் தொடர்புடைய அனைத்து உத்தி யோகத்தர்களும் (உ-ம்: சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் சிறுவர் உரிமை மேம்பாடு பற்றிய தேவைகளைக் கவனித்தலும்,

2 உதவியாளருக்கு இருக்கவேண்டிய பண்புகளின் விரிவான விளக்கங்களுக்கு சாந்திகத்தின் "தமிழ் சமுதாயத்தில் உளநலம்" கைந்நூலின் அத்தியாயம் 1 ஐப் பார்க்கவும்.

ஆவனசெய்தலும், ஆவணப்படுத்தலும்) தமக்குரிய பணிகளை மேற்கொள்வதுடன், அது தொடர்பான அறிக்கைகளைச் சம்பவ முகாமையாளருக்கு அறிக்கையிடுவார். அத்துடன் தனது பணி தொடர்பான நடவடிக்கைகளையும் ஆவணப்படுத்துவார்.

இவ்வாறாக பகுதியளவில் தொடர்புபடுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரிடமிருந்தும் கிடைக்கின்ற அறிக்கைகளை அடிப்படையாகக் கொள்வதுடன், தான் மேற்கொண்ட தலையீடுகள் தொடர்பான விடயங்களையும் உள்ளடக்கி சம்பவ முகாமையாளர் சம்பவம் தொடர்பான முழுமையான ஆவணப்படுத்தலை மேற்கொள்வார்.

**சம்பவ முகாமையாளரின் ஆவணப்படுத்தலில் உள்ளடங்க வேண்டிய ஆகக் குறைந்த உள்ளடக்கங்கள்**

- வழங்கப்படும் அறிக்கைகளில் ஒவ்வொரு தலையீடு பற்றிய பூரண விபரத்துடன் இனிமேல் செய்ய வேண்டிய தலையீடு பற்றியும் பொறுப்பாளர் யார் என்பது பற்றியும் காலநேர அட்டவணையுடன் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- யாரால் இச்சம்பவம் தெரியப்படுத்தப்பட்டது அல்லது கையளிக் கப்பட்டது என்ற விபரம்.
- குறித்த சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட தரப்பினர் பற்றிய விபரம்.
- சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களும் அவர்களின் பொறுப்புக் களும்.

1. சம்பவ முகாமையாளரிடம் சம்பவ செயற்பாட்டுத் திட்டம் (Action Plan) ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
2. சம்பவம் கையாளுதல் தொடர்பான அறிக்கைகளும் ஆவணப் படுத்தல் வேண்டும்.

**கண்காணித்தல்**

1. சம்பவ முகாமையாளரின் செயற்பாட்டுத் திட்டத்திற்கேற்ப (Action Plan) நடைமுறைப்படுத்தல். அறிக்கைகள் கிடைக்கப்பட்டதை உறுதிப்படுத்தலும் நிலைமையின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தலும்.

உ-ம்: குறிகாட்டிகள்/சுட்டிகள் பயன்படுத்துவதன் மூலம் அவர்களின் தரமேம்பாட்டினை உறுதிப்படுத்தல்.

2. படிவங்கள்

அ. மேலதிக சேவைப் படிவம் (Referral Form).

ஆ. சம்பவ அறிக்கை (Incidental Reporting Form).

இ. துணைநாடிகளை உள்வாங்கும் படிவம் (Client Register Form).

ஈ. மனச்சோர்வு, பதகளிப்பு, நெருக்கீடு அளவீட்டுப் படிவம் (DASS 21).

உ. உளவளத்துணை முன்னேற்ற மதிப்பீட்டுப் படிவம் (உளவளத்துணை தேவைப்படின்) (Client Intake Form)

---

**பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் கையாளும் பணியாளர்களுக்கான நியம படிமுறைகள்**

வெளியீடு : சாந்திகம்

முதற்பதிப்பு: 2016

நிதி அனுசரணை: சுவிஸ் தூதரகம்

ஓவியம்: அட்டைப்படம் – திருமதி கோமதிதேவி செல்வநாதன்

உள்படம்: செல்வி கஜனி தனபாலசிங்கம்

நெறிப்படுத்துநர் : பேராசிரியர் தயா சோமசுந்தரம் (உள சமூகம்)

செல்வி சியானி டக்கிளஸ் (சட்டம்)

திருமதி நவறஞ்சினி நடராஜா (பால்நிலை)

**இந்த புத்தகத்தில் உள்ள எந்தப்பகுதியையும் நன்றியோடு மறுபிரசுரம் செய்யலாம்**

Association for Health and Counselling
"Shanthiham"
No.8.8/1 Katpahavinayagar Lane
Off Kachcheri Nallur Road,
Jaffna.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (பா.அ.வ) பெரும்பாலும் கலாசார மரபுகளுக்குட்படுத்தப்பட்டு குடும்ப வாழ்க்கையின் ஓர் அன்றாட சாதாரண அங்கமாகத் தட்டிக் கழிக்கப்படுகின்றன. ஆயினும், பா.அ.வ தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அதன் பாரிய விளைவுகள் உணரப்படும் தன்மை அதிகரிப்பினால், அது ஓர் வன்முறை என்பதுடன் மனித உரிமை மீறலாகவும், பாதிக்கப்பட்ட நபர் வன்முறையால் பாதிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை எனவும் அவர்களால் எதிர்க்கவும், முறையிடவும், பாதுகாப்பைத் தேடவும் முடியும் என்பது தொடர்பான பார்வை மாற்றமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் குறைந்த விழிப்புணர்வு, வினைத்திறனான சட்ட உருவாக்கம், உதவும் பொறிமுறைகள், ஆதரவு தேட முயலுவோருக்கான பாதுகாப்பு வலையமைப்பு மற்றும் வன் முறைகளாக ஏற்றுக்கொள்வதைப் பின்தள்ளும் சமூக நியமங்கள் (உ-ம் தப்பிப்பிழைத்தவர்களுக்கு ஆதரவளிப்பதற்குப் பதிலாக குற்றம் சாட்டுதல்), போதுமான அளவு அரசாங்கப் பொறி முறைகள் இல்லாமை, சிவில் சமூகம் மற்றும் சமூகமட்டத்தில் பா.அ.வ இற்கு எதிராக ஒன்றிணைந்து முழுமையாக செயற்படுதல் என்பவற்றிலுள்ள இடைவெளிகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. இத்தகைய நிலையானது போருக்குப் பின்னரான சூழ்நிலையில் மேலும் தீவிரமடைந்துள்ளது. சமூகக்கட்டமைப்புகள் மற்றும் பாதுகாப்புப் பொறிமுறைகள் உடைவடைந்தமை, சமூக நடத்தையை வழிப்படுத்தும் நியமங்கள் பலவீனமடைந்தமை, குடும்ப உறவுகளின் பிரிவு, ஆண்களின் குடி, போதைவஸ்து துர்பாவனை அதிகரிப்பு, பெண்கள் மற்றும் சிறுவர்களின் கருத்துகளையும் கோரிக்கைகளையும் வளர்ந்தவர்கள் செவிமடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக இருப்பதுடன் பெண்கள், சிறுவர்களின் பாதுகாப்பை அதிகாரிகள் கருத்தில் எடுக்கத் தவறியமை உள்ளடங்கலாக பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம்.

**– முன்னுரையிலிருந்து**


**'சாந்திகம்'**
**8,8/1 கற்பக விநாயகர் ஒழுங்கை.**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

தொ.பே : 021 222 3338, 9720
தொலை நகல் : 021 222 3338
மின்னஞ்சல் : psych@sltnet.lk
இணையம் : shanthiham.org
முகப்புத்தளம் : shanthiham